1979 மார்ச் 8] [திரு. ச. இராமச்சந்திரன்]

களோ அவர்கள் வந்தால் போதும் என்று விளம்பரம் போடப்பட்டு இருக்கிறது. விவசாயிகள் சங்கத்தைப் பொறுத்த வரையில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், எல்லோருக்கும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் என்னாலே அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல அந்த உச்ச மட்டக் குழுவில் இருக்கும் விவசாயி சங்கப் பிரதிநிதிகளும் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு இருக்கிறார்கள். விவசாய சங்கப் பிரச்னைக் குறித்து பேச வேண்டும் என்று விரும்புகிற எல்லோரும் வாருங்கள் என்று விளம்பரம் போட்டால் ஒரு வேளை அது மிகப்பெரிய மாநாடு போல் ஆகிவிடும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் உணர்வார்கள். ஆகவே, இரண்டு கூட்டங்களும் இன்று நடக்கின்றன. இரண்டு கூட்டங்களுக்கும் சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாய சங்கப் பிரச்னையைப் பொறுத்தவரையில் அனைத்துக்கட்சித் தலைவர்களும், அதே போன்று விவசாய சங்கப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) நெல்லை மாவட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவரது கார் தாக்கப்பெற்றது குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, மீண்டும் அதைப் பற்றி அல்ல. இந்த அவையில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டு, அவையின் பொருளாக ஆகிவிட்ட ஒரு பொருள் குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் ஒன்றை வைக்க விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் நான் சுற்றுப்பயணம் செய்த போது என் வேன் மீது, என் காரைப் பார்த்து உளி வீசப்பட்ட நிகழ்ச்சி குறித்து இங்கே விவாதிக்கப்பட்டு, முதல் அமைச்சர் அவர்களும் அதற்காக வருத்தம் தெரிவித்து, நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அவை முன்னவர் அவர்களும் அதற்கான உறுதிமொழி அளித்தார். கைது செய்யப்பட்ட செபாஸ்டின், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் என்று அங்கேயுள்ள இன்ஸ்பெக்டர் கோர்ட்டிலே புகார் கொடுத்து இருக்கிற அந்த மனுவில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கேயுள்ள மருத்துவ மனையில் அதே இன்ஸ்பெக்டர் கொண்டு போய்ச் சேர்த்து கைது செய்யப்பட்டவர் சார்பாக யாரும் வராமல், போலீஸ்காரர்களே அவருக்குப் பைத்தியம் இருக்கிறதா பாருங்கள் என்று ஆஸ்பிடலில் சேர்த்து அங்கேயுள்ள டாக்டர்கள் அப்படி எந்தவிதமான சான்றிதழையும் கொடுக்காத காரணத்தால், திடீரென்று சென்னையில் இருக்கின்ற கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று இருக்கிறார்கள். ஒரு குற்றவாளி கைது செய்யப்பட்டிருக்கலாம். அதற்காக

இப்படிப்பட்ட கடும் தண்டனை அளிக்கவேண்டுமா? அவனை பைத்தியக்காரன் என்று கொண்டு வந்து வைத்துக்கொண்டு இருக்கிற காரணத்தாலே இதிலே எனக்கு நிரம்ப சந்தேகம் இருக்கிறது. எனவே அரசாங்கம் துணிவோடு இந்தப் பிரச்னையில் ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் போட்டு, அதைப் பற்றி விசாரிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட கேள்வி நேரம் போலவே இதை ஆக்கியிருக்கிறார்கள். அவர்கள் இப்போது கடைசியாகச் சொன்ன விவரங்களைப் பற்றி எந்தவிதமான தகவலும் சொல்லமுடியாத சூழ்நிலை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அப்படியானால் அதைப் பற்றி எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தகவல் பெற்று அறிவிக்க வேண்டும். அவர் பைத்தியம் என்பதற்கு டாக்டர் சர்ட்டிபிகேட் இல்லாமல் சேர்க்கப்பட்டு இருந்தால் எவ்வாறு அவர் அப்படிச் சேர்க்கப்பட்டார் என்பது புதிராக இருக்கிறது. இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால், அரசாங்கம் எவ்வளவு சீக்கிரம் இதைத் தெளிவு படுத்தமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதைத் தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திரு. சங்கரய்யா கொடுத்த யோசனை நிச்சயமாக அரசு கவனத்தில் கொள்ளும்.

(3) உரிமைப் பிரச்னை.—

சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு, மேலவை பார்வையாளர் மாடத்தில் தனி இடம் ஒதுக்கப்பெறாதிருப்பது குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்னை. பேரவை விதி 184 ன் கீழ்....

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்த பிரச்னைக்குப் போய்விட்டேன். உட்காருங்கள். பேரவை விதி 184ன் கீழ் திரு. ஒ. சுப்பிரமணியன் ஒரு உரிமை மீறல் பிரச்னை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.